43

# திருநள்ளாற்றுத் - - - - தலவரலாறு.

43
1-56

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1956
MADRAS

நள்ளாறன் தேவஸ்தான
வெளியீடு.

உ

சிவமயம்.

# திருநள்ளாற்றுத் தல வரலாறு.


ஆக்கியோர்:

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன

சைவப்பிரசாரகர்,

தருக்கை,

**திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள்**


திருநள்ளாறன் தேவஸ்தான வெளியீடு.


யதார்த்தவசனீ பிரஸ்,

கும்பகோணம்.

(இரண்டாம் பதிப்பு.)

5000 காப்பிகள்.

1955


இதன் விலை] [அணா 4.

TAMIL NADU ARCHIVES LIBRARY
100175
EGMORE, MADRAS

# பொருளடக்கம்.


| | | பக்க எண் |
|---|---|---|
| தலம் இருக்குமிடம் | .... | 1 |
| சப்தவிடங்கர் வரலாறு | .... | 2 |
| தலப்பெயர்கள் | .... | 3 |
| ஆலய அமைப்பு | .... | 3 |
| மூர்த்திகள் | .... | 4 |
| தீர்த்தங்கள் | .... | 4 |
| பூசித்துப் பேறுபெற்றவர்கள் | .... | 6 |
| புராண வரலாறு | .... | 7 |
| திருவிழாக்கள் | .... | 13 |
| பாடல்கள் | .... | 13 |



கோவிலின் முன்தோற்றம்.

உ

சிவமயம்.

# திருநள்ளாற்றுத் தல வரலாறு.

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற் றண்ணல் பரமேட்டி
யாகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

—திருஞானசம்பந்தர்.

## 1. தலம் இருக்குமிடம்.

காவிரி பாய்தலால் கவின்பெற்று மிளிரும் சோழ வளநாட்டில் மிகப்பழமையானதும், மூர்த்தி தலம் தீர்த்த மென்னும் மூன்றினும் மிகச் சிறப்பு வாய்ந்ததும், முன்னாளில் நம் சைவ சமயத்திற்குப் புத்துயிர் அளிக்கத் திருவாலவாயில் அனலிடைப்பட்டும் வேகாதிருந்த "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் பச்சைப் பதிகத்தை உடையதுமாகிய பெருமையினைப் பெற்றதும், திருநள்ளாறு என்னும் இத்தலம். அரிசொல்நதிக்கும், வாஞ்சைநதிக்கும் இடையிலுள்ளது. பேரளம் புகைவண்டி நிலையத்திலிருந்து காரைக்கால் செல்லும் இருப்புப்பாதையில் ஒரு புகைவண்டி நிலையமாகவும் அமைந்துள்ளது. எனினும் ஆலயம்

புகைவண்டி நிலையத்திலிருந்து தென்புறம் அரை நாழிகை தூரத்தில் உள்ளது. இத்தலத்துக்கு வடகிழக்கில் நக்களூரும், கிழக்கில் காரைக்காலும், தெற்கில் சீயாத்த மங்கையும் இருக்கின்றன. மேலும், இத்தலம் சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது.

## 2. சப்தவிடங்கர் வரலாறு.

முன்னாளில் திருமால் மகப்பேறு வேண்டிச் சிவபெருமானை அம்மையாரோடும் கந்தரோடும் மார்பகத்து வைத்துப் பூசித்து அருள்பெற்ற மூர்த்தியை அவர்பாற் பெற்று பூசித்துவந்த தேவேந்திரன் வலாசுரனைத் வெல்லத் தனக்குத் துணைசெய்த முசுகுந்தச் சக்கரவர்த்திக்குப் பரிசளிக்க நினைந்து காமதேனு, கற்பகம், இந்திராணி முதலியவைகளையன்றி யாது வேண்டினும் ஈவோம்'' என்று சொல்ல அதற்கு முசுகுந்தன். 'நீ உன் பூஜா மூர்த்தியைத் தருவாய்' என்ன, தான் அறியாது கூறிய சொல்லுக்கு மாறுபாடின்றிக் கொடுக்க நேர்ந்தமையால் தேவேந்திரன் அப்பூஜா மூர்த்தியைப்போல் ஆறு உருவங்களைத் தெய்வக் கம்மியனால் செய்துகொடுக்க அப்போது முசுகுந்தன் இறைவனருளாலுணர்ந்து மூலமூர்த்தியையே அடையாளங்கண்டு கேட்கத் தேவேந்திரன் மூலமூர்த்தியோடு அவ்வாறையும் சேர்த்துக்கொடுத்தனன். அவற்றுள் திருவாரூரில் மூலமூர்த்தியையும் ஏனைய மூர்த்திகளைத் திருநள்ளாறு திருநாகைக்காரோணம், திருக்காராயில். திருக்கோளிலி, திருவான்மியூர், திருமறைக்காடு என்ற ஆறுதலங்களிலும் பிரதிட்டை செய்துவழிபட்டான். அவ்வேழும் சப்தவிடங்கத் தலங்களெனப்படும். அவ்வேழில் இத்தலத்து விடங்கத்

தியாகர் திருநாமம் நகவிடங்கர் என்பதாகும். நடனம் உன்மத்த நடனம் எனப்படும்.

## 3. தலப் பெயர்கள்.

ஆதிகாலத்தில் பிரமதேவர் பூசை செய்ததால் ஆதிபுரியெனவும், தலவிருக்ஷம் தருப்பையாதலால் தருப்பாரண்யமெனவும், நகவிடங்கரை பிரதிட்டை செய்தமையால் நகவிடங்கபுரமெனவும், நளச்சக்கரவர்த்தி வழிபட்டமையால் நளேச்சுரம் எனவும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இந்நான்கு பெயர்களும் முறையே நான்கு யுகங்களுக்கும் வழங்கப்படுகின்றன. நளன் என்னும் பெயர்ச்சொல்லின் அன் விகுதிகெட்டு ஆறு என்னும் சொற்புணர்ந்து நள்ளாறு என்றாயிற்று அஃதாவது நளனுக்கு நன்னெறி காட்டிய தலம் எனப் பொருள்படும். அன்றியும், நல்லாறு என்பது நள்ளாறு என மருவி வழங்குவதெனினும் ஒக்கும்.

## 4. ஆலய அமைப்பு.

ஆலயம் ஊரின் நான்கு பெரிய வீதிகளுக்கு நடுவண் கிழக்குச் சன்னதியாய் அமைந்திருக்கிறது. கிழக்கில்மட்டும் இராஜகோபுரமிருக்கிறது. இரண்டு பெரு மதில்களுள்ளன. இறைவர் சன்னிதி கிழக்கு முகமாயும், அம்மையார் சன்னிதி முதற்பிரகாரத்தில் சோபனமண்டபத்தில் தெற்கு முகமாயுமிருக்கிறது. சனீசுர பகவான் சன்னிதி கிழக்கு முகமாய் அம்மையார் சன்னிதிக்கு முன்புறம் அமைந்துள்ளது. மூலத்தானம் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிரகத்துக்குத் தென்புறமாய் விடங்கத் தியாகர் மண்டபம் அமைந்திருக்கிறது. அர்த்தமண்டபம், சபாமண்டபம்

முதலியனவும் விசாலமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. உட்பிரகாரத்தில் பரிவார மூர்த்தங்களுக்கு மாடப்பத்திகளமையப்பெற்றிருக்கின்றன. சபாநாதருக்கும் வயிரவருக்கும் தெற்கு முகமாய்ச்சேர்ந்த மண்டபமமைந்து இருக்கிறது. கோபுர வாயிலுக்கு வெளியே வடபுறமாய் உற்சவ மண்டபமும், அதற்குமுன் இடையன்முத்திமண்டபமுமிருக்கின்றன.

## 5. மூர்த்திகள்.

இறைவனது திருநாமங்கள் ஆதிமூர்த்தி, தருப்பாரண்யேசுரர், நள்ளாறர். அம்மையாரது திருநாமம் போகமார்த்தபூண்முலையாள், பிராணேஸ்வரி, விநாயகர் திருநாமம் கற்பக விநாயகர் சுவர்ணவிநாயகர். நகவிடங்கத்தியாகரது அம்மன் திருநாமம் நீலோற்பலாம்பாள். அன்றிச் சபாநாதர் பைரவர், தென்முகப்பெருமான், அறுபான்மூன்று வகையடியார்கள், தொகையடியார் ஒன்பதின்மர், வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமான், சண்டேசர் முதலிய மூர்த்தங்களுமிருக்கின்றன. இத்தலத்தில் சனீசுரபகவான் மிகச்சிறப்புடையதும் மூர்த்திகரமுடையதுமாகும். ஏனைய கிரகங்களில்லை. அகத்தியர் முதலிய சப்தரிஷிகள் பூசித்த இலிங்கங்கள் உட்பிரகாரத்துமாடப்பத்தியில் மேல்புறமிருக்கின்றன அதன் வடபுறம் இலக்குமி தேவியுமிருக்கின்றனள்.

## 6 தீர்த்தங்கள்.

இத்தலத்திற்கு அஷ்டதிக்குப் பாலகர்களாகிய எண்மர்களாலும் அமைக்கப்பட்ட தீர்த்தங்கள் கிழக்குமுதலாய் வலமாகத்தொடங்கி அமைந்துள்ளன. சிறப்பாக ஆலயத்

தின் சன்னிதிக்கு நேரே கீழ்ப்பால் பிரமதேவன் தனது தண்டாயுதத்தால் அமைத்துப் பெருமானுக்கு அபிடேகஞ் செய்த பிரமதீர்த்தம் ஒன்று உண்டு. அதில் நியதியாய் முழுகுவோர்கள் பிரமபதம் சேர்வர். கோயிலுக்குத் தென்பால் அம்மையார் சன்னிதிக்குநேரே மதிலுக்கு அணிமையில் வாணிதீர்த்தம் அமைந்திருக்கிறது. அதில் முழுகுவோர்க்கு எல்லா கலைஞானங்களும் உண்டாகும். ஆலயத்திற்கு வடபால் அன்னதீர்த்தமும், அகத்தியர்தீர்த்தமும் இருக்கின்றன. ஆலயத்துக்கு வடமேற்றிசையில் நளதீர்த்தமிருக்கிறது. அதில் மூழ்குவோர்க்கு எல்லா கிரகதோஷங்களும், பீடைகளும் நிவர்த்தியாகும். அதற்கு அண்மையில் நளகூபம் ஒன்றுண்டு. அது நளன்பொருட்டாக இறைவன் காசிக்கங்கையை வருவிக்கத் தனது சூலாயுதத்தால் உண்டாக்கித்தந்தது. அக்கூபத்தைத் தரிசிப்பதன்றி முழுகும் வழக்கமில்லையென்று புராணம் கூறும்.

## 7. மண்டைத் தீர்த்த வரலாறு.

இப்பெயர் பிரம தீர்த்தத்திற்கே வழங்குகிறது. இவ்வாலயப் பசுநிறைமேய்க்கும் கோரி என்னுமோர் இடையன் தினந்தோறும் சுவாமிக்கு அபிடேகிக்கக் கொடுக்கும் பாலை ஆலயக்கணக்கன் ஒருவன் வரவு வைக்காமல் விலைப்பால் வாங்கினதாய்க் கணக்கெழுதி வைத்துக்கொண்டு தான் அப்பொருளை அபகரித்துவந்தான். அரசன் வந்து கணக்குப் பரிசோதனை செய்யுங்கால் பால் வாராமைக்கு இடையனைக் காரணம் கேட்டபோது நான் தவறாமல் கொடுத்துவருகிறேனென்ன, அதற்குச் சான்றுயார் என்று வினவினன். 'இவ்விறைவரேதான் சாட்சி' என்று இடையன் சொல்லக்

கேளாது, ஓர் இரவு முழுதும் ஓர் அறையில் அவனைச் சிறைசெய்துவைக்க அப்பொழுது அவ்விடையன் கனவில் தருப்பாரண்யேசுவரர் தோன்றி "அன்பனே நாளையும் உன்னை துன்புறுத்தி வினவினால், அக்கணக்கனைச் சந்நிதியில் பிரமாணம் செய்யுமாறு செய்வாய்; அப்போது நாமே வந்து உனக்குச் சாட்சிசொல்லி அவனையும் தண்டிப்போம்" என்று திருவாய் மலர்ந்தருளக் கேட்டு, அவ்வாறே மறுநாள் இடையன் பிரமாணம் செய்யச்சொன்னான். அக்கணக்கன் பிரமாணம் சொல்லும்போது இறைவர் தோன்றி அப்பாதகனது தலை கொய்யும்படி சூலாயுதத்தால் வீச, அத்தலை போய் விழுந்த குளமே மண்டைக் குளமெனப் பெயர் பெற்றது. அது மருவி இப்போது மட்டைக்குளமென வழங்குவதாயிற்று. அத்தலை சிதைந்தோட அப்போது நந்தியும் பலிபீடமும் விலகிக்கொண்டன. இப்போதும் அவைகள் விலகியிருப்பதைக் காணலாம். பிறகு அவ்விடையனுக்கும் அவன் மனைவிக்கும் இறைவன் முத்தி கொடுத்தருள அவ்விடையன் வேண்டுகோளின்படி அக்கணக்கனுக்கும் முத்திகொடுத்தருள அம்மூவரும் சந்நிதியில் தென்பால் சிலையுருவாய் ஓர் மண்டபத்தில் வைக்கப் பட்டிருக்கின்றனர்.

## 8. பூசித்துப் பேறுபெற்றவர்கள்.

திருமால், பிரமன், இந்திரன், முசுகுந்தன், அஷ்ட திக்குப்பாலகர் முதலியோர்களும், அகத்தியர் முதலிய சப்தரிஷிகளும், அர்ச்சுனன், நளன், கலிங்காதிபதி, உருசி ராசன், வாணி, அன்னப்பறவை முதலியோர்களும் பூசித்துப் பற்பல வரங்களைப் பெற்றுள்ளார்கள்.

## 9. புராண வரலாறு.

### நளமகாராஜனுக்கு கலி நீங்கியது.

நிடதநாட்டு மன்னனாகிய நளச்சக்கரவர்த்தி விதர்ப்ப நாட்டு மன்னன் புத்திரியாகிய தமயந்தியைச் சுயம்வரத்தால் மணம்செய்தபோது, தாம் தாம் மணம் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணி வந்திருந்த தேவர்களனைவரும் நாணமும் பொறாமையு மடைந்து இவ்விருவர் வாழ்வையும் பிரிக்க நினைந்து சனீசுரபகவானிடம் முறையிட்டனர். அவரும் அதற்கு இசைந்தவராய் அம்மன்னன் வழுவுங் காலம் எதிர்பார்த்திருந்து அவனைப் பற்றிக்கொண்டு சூதாடும்படி செய்தார். நளன் நாடும் நகரமுமிழந்து தன் மக்களையும் மாதுலன்பால் விடுத்து மனைவியோடும் கானகம் புக்கான். கானகத்தில் மனைவியையும் பிரிந்து கார்க்கோடகனால் தீண்டப்பட்டுத் தன் உருவமும் வேறுபாடுற்று வேற்றரசனிடம் புகுந்து இரத சாரதியாய் இருந்துவந்தான். மனைவியும் பிரிந்த நாயகனைத் தேடியலைந்து காணாது மனந்தளர்ந்து வருந்தி மேனியழகெலாம் குன்றி விதிவழி தந்தையார் மாளிகைக்குப் போயிருந்தாள். தந்தை தன் மகளென உணர்ந்து மீண்டும் நளமகாராஜனைத் தமயந்திபால் சேர்த்துவைத்தற்கெண்ணி மறுமுறையும் சுயம்வரம் ஏற்படுத்தினான். அப்போது அரசனோடு சாரதியாய் வந்த நளன் உண்மையுணர்ந்து தமயந்தியையும் மக்களையும் கண்டு மகிழ்ந்து அளவளாவி மாதுலன்பால் விடைபெற்று அவர்களோடும் தன்னாடடைந்தான். பிறகும் அவன் உன்மத்தர் பிசாசர்போல அறிவுநிலை கலங்கியிருப்ப, நாரதர் அங்கு வந்து சனீசுரபகவானால் பீடிக்கப்பட்டிருக்கும் அவனைப்பார்த்து தீர்த்தயாத்திரை செய்யும்படி சொன்னார் அவ்வாறே

கங்காதீரம் முதல் காவிரிவரையிலுமுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும் சென்று நீராடியும் தீராமல் திருக்கோகர்ணம் செல்லுங்கால் அங்கு வதிந்த பரத்துவாசமுனிவரால் இத்தல மாட்சி உபதேசிக்கப்பெற்று மனைவி மக்களோடும் காடுமலையுங் கடந்து இத்தருப்பாரண்யம் வந்து தீர்த்தமாடி ஆலயம் புகுமுன் சன்னதியில் இறைஞ்சிச் சிரமேற் கைகுவித்துக் கொண்டு செல்லும்போது, காகவூர்தியும் காகக்கொடியுமுடையவராய் கருத்த மேனியும் சூலாயுதமுங்கொண்டு சனிபகவான் இனிமேலும் இந்நளனை வருத்தினால் சிவபெருமான் திருவுளத்துக்கு அபராதியாவோம் என அஞ்சி மின்னற்கொடிபோல் திடீரென விலகி இறைவனது திருவடிகளை வணங்கி அங்கு அமர்ந்தார். பின்னர் நளமகாராஜனும் பன்னாள்வழிபட்டுக்கொண்டிருந்து திருப்பணிகள் பலவும் செய்து திருவிழா முதலியனவும் சிறப்புற நடாத்தி வரம் பல பெற்றுய்ந்தான். இவ்வரலாற்றைத் திருஞானசம்பந்த சுவாமிகள் தேவார பாசுரத்திற் சிறப்பித்திருத்தலைக் காணலாம்.

விளங்கிழை மடந்தை மலைமங்கை யொருபாகத்
துளங்கொள விருத்திய வொருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூப மலர்தூவி
நளன் கெழுவி நாளுவழி பாடுசெய் நள்ளாறே.

அன்று முதலாய் நளன் கேட்டுக்கொண்டபடி சனிபகவான் அத்தலத்திலமர்ந்து ஏவல், வைப்பு, கிரகதோஷம் இவைகளால் பீடிக்கப்பட்டுத் துன்புறுவோர்க்கு நிவர்த்தி செய்து அருளுகின்றனர். ஆதலால் சனீசுரபகவான் ஒரு இராசியிலிருந்து மற்றொரு இராசியில் பிரவேசிக்கும் காலமா

கிய சனிப் பெயர்ச்சிக் காலங்களில் எண்ணிறந்த மக்கள் தில தீபமிட்டு வழிபாடுசெய்து நற்பேறு பெருகின்றார்கள். மற்றைய நாட்களிலும் அநேகர் வந்து வழிபடுகின்றனர்.

## கலிங்காதிபதி பாப விமோசனம்.

கலிங்கநாட்டு மன்னன் மறையவர்களை அசுவ மேத யாகஞ்செய்ய வருவித்து அனைவரையும் முகமனோடு உபசரித்து அரசன் மனையுட்சென்றான். பிறகு பார்க்கனென்னும் வேதியன் வந்து அரண்மனை வாயலிற் காத்திருந்தும், தூதர்பாற் சொல்லியனுப்பியும் அரசன் தன்னை வந்தழைத்து மரியாதை செய்யாததால் கோபித்து அரசனையும் அவன் மனைவி மக்களையும் காட்டானையாகும்படி சபித்தான். மன்னனும் மனைவி மக்களுடன் காட்டானைகளாகி கானகத்துத் திரிந்துகொண்டிருந்தான். அவர்களை நாரதர் சந்தித்து முன்னிலைமையை யுணர்த்தி "நீங்கள் இச்சாபந் தீரவேண்டில் நள்ளாறுசென்று பிரமதீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபடுவீர்களாக" என்றனர். அதன்படி கலிங்காதிபதி மனைவி மக்களோடும் இத்தலத்து பிரம தீர்த்தத்தின் கரையணுக, முழுகினோரது நீர்த்துளி அவர்கள்மீது விழுதலும் யானையின் உருவம் மாறி மானிட உருவம் பெற்று நின்றார்கள். அனைவரும் இறைவனது அருளையும் தீர்த்தத்தின் பெருமையையும் புகழ்ந்தனர். பின்னும் அத்தடாகத்தில் மூழ்கி ஆலயத்தையடைந்து அம்மையப்பரை வணங்கித் துதித்து அங்கு பலநாளிருந்து பணிகளியற்றிவிழா முதலியன செய்து வரம்பெற்றுத் தன் நாடடைந்து வாழ்ந்து வந்தான்.

## உருசிராஜன் வரப்பெற்றது.

அவந்தி நாட்டு மன்னன் உருசிராஜன் என்பவன் பரத்துவாச முனிவரைத் தானங்களுட் சிறந்ததும் அது செய்தற்குரிய நாடும் தலமும் வினவ, அம்முனிவர் தானத்திற் சிறந்தது அன்னதானம் எனவும், அதற்குரிய நாடு சோழநாடே எனவும், அதிலும் திருநள்ளாற்றுத் தலம் மிகச் சிறப்புடையது எனவும் சொன்னார். மன்னன் மகிழ்ந்து அரசியலை மந்திரிபால் விடுத்து, இத்தலத்தில் வந்திருந்து அன்னதானங்களியற்றி சிறப்பாகத் தனுர்மாசத்து பௌர்ணமியில் அன்னதானங்களோடு அடியார்களுக்கு மற்றும் வேண்டுவனவும் கொடுத்து இறைவனை வழிபாடு செய்துகொண்டிருந்தான். ஒருநாள் கருப்பாரண்யேசுரர் அவன் முன்தோன்றி காட்சியளித்து "உனக்கு வேண்டிய வரம்யாது" என்ன "அழியாப் பேரின்பமாகிய நின் திருவடிப்பேறே வேண்டு" மென்று பெற்று, மறு பிறப்பில் துறவுபூண்டு இத்தலத்தை யடைந்து வழிபட்டுச் சாயுச்யம் அடைந்தான்.

## கோஹத்தி நீங்கியது.

கோதாவரி நாடாளும் தூயகண்டவர்மன் என்னும் மன்னன் புத்திரகாமேஷ்டி யாகம் செய்து மகப்பெற்ற மகிழ்ச்சியினால் வேள்விசெய்த மறையவர்க்கு நூறு பசுக்களையும் மற்றைய வேதியர்க்கு வேறுபல தானங்களையும் கொடுத்தான். அப்போது பொறாமையுற்ற இரு வேதியர் ஓர் பசுவைப் பிடித்துக்கொண்டு தன்னது தன்னது எனச் சண்டையிட்டுத் தங்கள் கையிலிருந்த தண்டால் அடித்துக் கொன்றனர். அப்பாதகத்தால் கோஹத்தி பற்றக் கான

கத்திலலைந்து வருந்துங்கால் உரோமசர்மன் என்னும் வேதியன் கண்டு "இக்கொடும் பாவமாகிய சண்டாளம் எவ்வுபாயத்தாலும் தீராததாகும், நீங்கள் இருவரும் தருப்பாரண்யம் சென்று தீர்த்தமாடி இறைவனை வழிபட்டால் தீருமென்று" சொல்ல, அவ்விதமே இருவரும் ஓர் சிவராத்திரியில் இங்கு வந்தனர். அப்போது தீர்த்தமாடிவருவோராது தலைமயிர்த் திவலை இவர்கள் மேற்படுதலும் உருவம் முன்னிலைமாறி காந்திமேயடு தோன்றக்கண்டு மகிழ்ந்து ஆலயம் புக்குப் பிராணேஸ்வரியையும் தருப்பாரண்யேசுரரையும் பலநாள் வழிபட்டுக்கொண்டிருந்து அப்பாதகத்தோடு அகப்பற்றும் புறப்பற்றும் நீங்கிச் சிவலோகஞ் சேர்ந்தனர்,

## அக்கினி வண்ணர் முத்தியடைந்தது:

காம்பிலி தேசத்துத் தெண்டிகுப்தன் என்னும் வைசிகனது மைந்தர் இருவர்களுக்கு தந்தை வைத்துப்போன பொருள்முழுதும் கற்பிற் சிறந்த தம்மனைவியை விட்டு வேசையர் வலையிற்பட்டதால் அழிந்துபோக, அவர்கள் உணவும், உடுக்க உடையுமின்றிக் களவுபுரிந்து சிறைப்பட்டனர், அதினின்று தப்பியோடி வழிபறித்துண்டு வருநாளில் பொய்யா விரதி என்னும் மறையவனைக் கண்டு அவனது பொருள்களைப் பறிக்க நெருங்கினர். அம்மறையோன் அவர்களுக்கு நற்புத்திகூறி "நீங்கள் உய்யும்வகை சொல்லுகிறேன் கேண்மினென்று" இத்தலமகிமை அனைத்துங்கூறித் தானும் உடன்வந்து இவர்களைத் தருப்பாரண்யேசுவரரையும் பிராணேஸ்வரியையும் தரிசனம்செய்து வைத்தான். பாமனைக் கண்டதும் நல்லுணர்வு வந்து இறைவனைப் பலவாறுய்த் தோத்தரித்து வழிபாடுகளும் செய்துகொண்டு தென்பாலுள்ள மடாலயத்தில் தங்கியிருந்தனர். அவர்

களுக்கு மரணாந்தகாலத்தில் இறைவன் ம்ருத்யஞ்சயமந்திரத்தை செவியில் உபதேசித்தனர். அதனால் பவநெறி நீங்கி முத்தியின்பம் பெற்றனர்.

பச்சைப் பதிக வரலாறு:

முன்னாளில் பாண்டியநாடு முழுவதும் சமண்சமயத்தால் மூடப்பட்டிருந்தது. அந்நாட்டரசனாகிய கூன் பாண்டியனென்னும் மன்னவனும் அச்சமயஞ்சார்ந்தனன். அம்மன்னனது மனைவியாகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரியாராகிய குலச்சிறையாரும் சைவநெறி தவறாது வழிபட்டுத் திருநீற்றைப் பாதுகாத்து வந்தனர். அப்போது திருஞானசம்பந்தர் மெய்ஞ்ஞானத்தோடும் திருவருள் பெற்றமை கேள்விப்பட்டு தம்நாட்டிற்கு அழைக்க அமணர்கள் அதுகண்டு பொறாமையுற்று அடியாரோடும் சுவாமிகள் தங்கியிருந்த மடத்தில் தீக்கொளுவினர்கள். அதையுணர்ந்த திருஞானசம்பந்தர் இவ்வெப்பு நோயாய் அரசனுக்காகுக வென்று பதிகம் பாடியருளவே அரசன் தீப்பிணியால் பெருந்துயருறக்கண்டு இருசமயத்தாரும் தீர்க்கத்தலைப் பட்டனர். அவ்வாதில் அமணர்கள் தோல்வியுற்றனர் திருஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றுப் பதிகம்பாடி மன்னவனுக்கு திருவாலவாயார் திருநீற்றைப் பூசி நோய் தீர்த்தருளினர்கள். அதுகண்டும் தேறாத அமணர்கள் பின்னும் வாதுக்குத் தொடர்ந்தனர். அப்போது இருவர் மந்திரமும் ஏட்டில் வரைந்து தீயிலிட வேகாதிருந்ததே வெற்றியுற்றதாமென சூளுரைத்துக்கொண்டு தீயிலிட அமணர்கள் இட்டவேடு தீக்கிரையாயிற்று. திருஞானசம்பந்தர் திருவருள் வழிநின்று தான் முன்பாடிய திருமுறையை வணங்கிக்கயறுசாத்த அப்போது இத்திரு

நள்ளாற்று முதற்பாசுரமாகிய போகமார்த்த பூண்முலையாள் என்னும் யாசுரங் கிடைத்தது. அதனைத்தீயிலிட அப்பதிகம் எழுதியஏடு வேகாதுநின்று சைவ சமயத்திற்கு உயிர் தந்ததுமன்றித் தன்னிறமும் பசுமைபெற்றிருந்தமையால் இப்பதிகத்திற்குப் பச்சைப் பதிகமெனப் பெயர் வழங்குவதாயிற்று. அன்றியும் சைவ சமயத்திற்கு உயிர்தந்த காரணம்பற்றியே நள்ளாற்று அம்மையாருக்கு பிராணேஸ்வரி என்ற நாமமும் வழங்குவதாயிற்று. இவ்வரலாற்றைப் பெரிய புராணத்தில் விரிவாய்க்காணலாம்.

## 10. திருவிழாக்கள்.

இத்தலத்தில் மகுடாகம விதிப்படி ஆறுகாலம் பூசைகள் நடைபெறுகின்றன. சனீசுரபகவானுக்கு நான்கு கால பூசைகள் நடைபெறுகின்றன. சனி வாரந்தோறும் விசேஷ அருச்சனைகளும் நடைபெறும். அன்று அனேகர் வந்து திலதீபமிட்டு வழிபாடு செய்வார்கள். அன்றியும் சனிப்பெயர்ச்சிக் காலங்களில் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். வைகாசி உத்திராட்டாதியில் துவசாரோகணமாகி பதினெட்டு நாட்களுக்குப் பிர்மோற்சவம் நடைபெறுகின்றது. அவ்வுற்சவ முடிவில் இடையனுக்குக் காட்சிகொடுத்து முத்தியளிக்கும் ஐதிகம் நடத்தப்படுகின்றது. தனுர்மாச பௌர்ணமியில் பலரும் வந்து அன்னதானம் முதலியன செய்வார்கள்.

## 11. பாடல்கள்.

திருஞானசம்பந்த சுவாமிகள் பதிகங்கள் நான்கு, திருநாவுக்கரசு நாயனார் பதிகங்கள் இரண்டு, சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகம் ஒன்று ஆகப்பதிகங்கள் ஏழு. இதில்

திருஞானசம்பந்தர் பதிகம் நான்கில் பாடகமெல்லடிப் பாவை யென்ற தொடக்கத்தையுடைய பதிகம் திருவால வாயில் நள்ளாற்றைச் சேர்த்துப் பாடப்பெற்றிருக்கிறது. இதையன்றித் தலபுராணமொன்று 307 பாடல்களால் பாடப்பெற்றிருக்கிறது அருணகிரிநாதரால் பாடப்பெற்ற திருப்புகழ் பாடலும் ஒன்று உண்டு.

திருஞானசம்பந்தப் பெருமான் தேவாரப்பதிகத்தில் நளனைச் சிறப்பித்து அவன் பூசித்த நள்ளாறு எனக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. திருநாவுக்கரசு சுவாமிகள் தமது தேவாரப் பதிகத்தில் "நள்ளாறு என நம்வினை நாசமே" எனவும், "நள்ளாற்றானை நான் அடியேன் நினைக்கப் பெற்றுய்ந்தவாறே" எனவும் சிறப்பித்திருக்கின்றார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் "தன்னைத் திருவெண்ணெய்நல்லூரில் பழமையாகிய தமிழில் எழுதப்பட்ட ஆவணமாகிய ஓலையைக் காட்டி ஆளாகக்கொண்ட நற்பதத்தை நள்ளாறனை அமுதை நாயினேன் மறந்து என் நினைக்கேனே" யென்று கூறி இத்தலத்தைப் பாராட்டுவாராயினர். இக்குறிப்புகளைப் பின்னர்த் தரப்பட்டுள்ள 'தவாரப் பதிகங்களிற் காணலாம்.

# திருமுறைகள்

## பண் - நட்டபாடை.

### திருஞானசம்பந்த சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்.

பாடக மெல்லடிப் பாவையோடும்
படுபிணக் காடிடம் பற்றிநின்று
நாடக மாடுநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
சூடக முன்கை மடந்தைமார்க
டுணைவ ரொடுந்தொழு தேத்திவாழ்த்த
ஆடக மாட நெருங்குகூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 1

திங்களம் போதுஞ் செழும்புனலுஞ்
செஞ்சடை மாட்டயல் வைத்துகந்து
நங்கண் மகிழுநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
பொங்கிள மென்முலை யார்களோடும்
புனமயி லாட நிலாமுளைக்கும்
அங்கழ கச்சுதை மாடக்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 2

தண்ணறு மத்தமுங் கூவிளமும்
வெண்டலை மாலையுந் தாங்கியார்க்கும்
நண்ணல் அரியநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
புண்ணிய வாணரும் மாதவரும்
புகுந்துட னேத்தப் புனையிழையார்
அண்ணலின் பாட லெடுக்குங்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 3

பூவினில் வாசம் புனலிற்பொற்புப்
புதுவிரைச் சாந்தினி னாற்றத்தோடு
நாவினிற் பாடல்கள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
தேவர்கள் தானவர் சித்தர்விச்சா
தரர்கணத் தோடுஞ் சிறந்துபொங்கி
ஆவினி லைந்துகந் தாட்டுங்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 4

செம்பொன்செய் மாலையும் வாசிகையுந்
திருந்துபு கையும வியும்பாட்டும்
நம்பும் பெருமைகள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
உம்பரு நாகரு லகந்தானு
மொலிகடல் சூழ்ந்த வுலகத்தோரும்
அம்புத நால்களா னீடுங்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 5

பாகமுந் தேவியை வைத்துக்கொண்டு
பைவிரி துத்திப் பரியபேழ்வாய்
நாகமும் பூண்டகள் ளாறுடைய
நம்பொருமானிது என்கொல்சொல்லாய்
போகமு நின்னை மனத்துவைத்துப்
புண்ணியர் நண்ணும் புணர்வுபூண்ட
ஆகமு டையவர் சேருங்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 6

கோவண ஆடையு நீறுப்பூச்சுங்
கொடுமழு வேந்தலுஞ் செஞ்சடையும்
நாவணப் பாட்டுநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
பூவண மேனி யிளையமாதர்
பொன்னும் மணியுங் கொழித்தெடுத்து
ஆவண வீதியி லாடுங்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 7

இலங்கை யிராவணன் வெற்பெடுக்க
எழில்விர லூன்றி யிசைவிரும்பி
நலங்கொளச் சேர்ந்தநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
புலன்களைச் செற்றுப் பொறியைநீக்கிப்
புந்தியி லுந்நினைச் சிந்தைசெய்யும்
அலங்க னல்லார்க ளமருங்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 8

பணியுடை மாலும் மலரினோனும்
பன்றியும் வென்றிப் பறவையாயும்
நணுகல ரியநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
மணியொலி சங்கொலி யோடுமற்றை
மாமுர சின்னொலி யென்றுமோவா
தனிகிளர் வேந்தர் புகுதுங்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 9

தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ்
சாதியி னீங்கிய வத்தவத்தர்
நடுக்குற நின்றநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
எடுக்கும் விழவுந் நன்னாள்விழவு
மிரும்பலி யின்பினோ டெத்திசையும்
அடுக்கும் பெருமைசேர் மாடக்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 10

அன்புடை யானை யரனைக்கூட
லாலவாய் மேவிய தென்கொலென்று
நன்பொனை நாதனை நள்ளாற்றானை
நயம்பெறப் போற்றி நலங்குலாவும்
பொன்புடை சூழ்தரு மாடக்காழிப்
பூசுரன் ஞானசம் பந்தன்சொன்ன
இன்புடைப் பாடல்கள் பத்தும்வல்லா
ரிமையவ ரேத்த விருப்பர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்த பூண்முலையா டன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 1

தோடுடைய காதுடையன் தோலுடை யன்றொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
எடுடைய மேலுலகோ டேழ்கட லுஞ்சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே 2

ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடிய ணியிழையோர்
பான்முறையால் வைத்த பாதம் பத்தர்ப ணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையா னம்பெருமான் மேயது நள்ளாறே. 3

புல்கவல்ல வார்சடைமேற் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோடு டன்சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற் பாதநி ழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

ஏறுதாங்கி யூர்திபேணி யேர்கொளி ளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோ ராடர வஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பினி ரைகொன்றை
நாறுதாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே. 5

திங்களுச்சி மேல்விளங்குந் தேவனி மையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவ னென்றடி யேயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடி யார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. 6

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி விண்கொண்மு ழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல்பாடல் பேணுவ தன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித் திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 7

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ றாடுவ தன்றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பான்ம தியஞ்சூடி
நட்டமாடு நம்பெருமான் மேயது நள்ளாறே. 8

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டுட னேயொடுக்கி
அண்ணலாகா வண்ணனீழ லாரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென் றெள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே. 9

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர்கு ணமிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதி லும்முடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 10

தண்புன லும் வெண்பிறைத் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தனல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்துமி வைவல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகிலு றைவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருவிராகம் பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எடுமலி கொன்றையர விந்துவிள வன்னி
மாடவல செஞ்சடையெ மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல்குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசியநள் ளாறே.

விண்ணியல் பிறைப்பிள வரைப்புனன் முடித்த
புண்ணிய னிருக்குமிட மென்பர்புவி தன்மேல்
பண்ணிய நடத்தொடிசை பாடுமடி யார்கள்
நண்ணிய மனத்தின்வழி பாடுசெய்நள் ளாறே. 2

விளங்கிழை மடந்தைமலை மங்கையொரு பாகத்
துளங்கொள விருத்திய வொருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே. 3

கொக்கரவர் கூன்மதியர் கோபர்திரு மேனிச்
செக்கரவர் சேருமிட மென்பர்தட மூழ்கிப்
புக்கரவர் விஞ்சையரும் விண்ணவரு நண்ணி
நக்கரவர் நாமநினை வெய்தியநள் ளாறே: 4

நெஞ்சமிது கண்டுகொ ளுனக்கென நினைந்தார்
வஞ்சம தறுத்தருளும் மற்றவனை வானோர்
அஞ்சமுது காகியவர் கைத்தொழ வெழுந்த
நஞ்சமுது செய்தவ னிருப்பிடநள் ளாறே. 5

பாலனடி பேணவவ னுயிர் குறைக்குங்
காலனுடன் மாளமு னுதைத்தவ னூராம்
கோலமலர் நீர்க்குட மெடுத்துமறை யாளர்
நாலின்வழி நின்றுதொழில் பேணியநள் ளாறே. 6

நீதியர் நெடுந்தகையர் நீண்மலையர் பாவை
பாதியர் பராபரர் பரம்பர ரிருக்கை
வேதியர்கள் வேள்வியொழி யாதுமறை நாளும்
ஓதியரன் னாமமு முணர்த்திடுநள் ளாறே. 7

சடுத்துவ லரக்கன்மு னெருக்கிவரை தன்னை
எடுத்தவன் முடித்தலை கள் பத்துமிகு தோளும்
அடாந்தவர் தமக்கிடம தென்பரளி பாட
நடத்தகல வைத்திரள்கள் வைகியநள் ளாறே. 8

உயர்ந்தவ னுருக்கொடு திரிந்துலக மெல்லாம்
பயந்தவன் நினைப்பரிய பண்பனிட மென்பர்
வியந்தமரர் மெச்சமலர் மல்குபொழி லெங்கும்
நயந்தரும் வேதவொலி யார்திருநள் ளாறே. 9

சிந்தைதிரு கற்சமணர் தேரர்தவ மென்னும்
பந்தனை யறுத்தருளு கின்றபர மன்னூர்
மத்தமுழ வந்தரு விழாவொலியும் வேதச்
சந்தம்விர விப்பொழில் முழங்கியநள் ளாறே. 10

ஆடலர வார்சடையன் ஆயிழைதன் னோடும்
நாடுமலி வெய்திட இருந்ததன்நள் ளாற்றை
மாடமலி காழிவளர் பந்தனது செஞ்சொல்
பாடலுடை யாரையடை யாபழிகள் நோயே 11

திருச்சிற்றம்பலம்.

## திருவிராகப் பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்

தளிரிள வளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 1

போதமர் தருபுரி குழலெழின் மலைமகள் பூணணி
சீதம தணிதரு முகிழிள வனமுலை செறிதலின்
நாதம தெழிலுரு வனையநள் ளாறர்தந் நாமமே
மீதம தெரியினி விடிவினை பழுதிலை மெய்ம்மையே. 2

இட்டுறு மணியணி யிணர்புணர் வளரொளி யெழில்வடம்
கட்டுறு கதிரிள வனமுலை யிணையொடு கலவலின்
நட்டுறு செரிவயன் மருவுநள் ளாறர்தந் நாமமே
இட்டுறு மெரியினி விடிவினை பழுதிலை மெய்ம்மையே. 3

மைச்சணி வரியரி நயனிதொன் மலைமகள் பயனுறு
கச்சணி கதிரிள வனமுலை யவையொடு கலவலின்
நச்சணி மிடறுடை யடிகணள் ளாறர்தந் நாமமே
மெச்சணி யெரியினி விடிவினை பழுதிலை மெய்ம்மையே. 4

பண்ணியன் மலைமகள் கதிர்விடு பருமணி யணிநிறக்
கண்ணியல் கலசம தனமுலை யிணையொடு கலவலின்
நண்ணிய குளிர்புனல் புகுதுநள் ளாறர்தந் நாமமே
விண்ணிய மெரியினி விடிவினை பழுதிலை மெய்ம்மையே. 5

போதுறு புரிகுழன் மலைமக ளிளவளர் பொன்னணி
சூதுறு தளிர்நிற வனமுலை யவையொடு துதைதலின்
தாதுறு நிறமுடை யடிகணள் ளாறர்தந் நாமமே
மீதுறு யெரியினி விடிவினை பழுதிலை மெய்ம்மையே. 6

கார்மலி நெறிபுரி சுரிசுழன் மலைமகள் கவினுறு
சீர்மலி தருமணி யணிமுலை திகழ்வொடு செறிதலின்
தார்மலி நகுதலை யுடையநள் ளாறர்தந் நாமமே
ஏர்மலி யெரியினி விடிவினை பழுதிலை மெய்ம்மையே. 7

மன்னிய வளரொளி மலைமக டளிர்நிற மதமிகு
பொன்னியன் மணியணி கலசம தனமுலை புணர்தலின்
தன்னிய றசமுக னெறியனள் ளாறர்தந் நாமமே
மின்னிய லெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 8

கான்முக மயிலியன் மலைமகள் கதிர்விடு கணமிகு
பான்முக மியல்பணை யிணைமுலை துணையோடு பயிறலின்
நான்முக னரியறி வரியநள் ளாறர்தந் நாமமே
மேன்முக வெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 9

அத்திர நயனிதொன் மலைமகள் பயனுறு மதிசயச்
சித்திர மணியணி திகழ்முலை யிணையோடு செறிதலின்
புத்தரொ டமணர்பொய் பெயருநள் ளாறர்தந் நாமமே
மெய்த்திர ளெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 10

சிற்றிடை யரிவைதன் வனமுலை யிணையொடு செறிதரும்
நற்றிற முறுகழு மலநகர் ஞானசம் பந்தன்
கொற்றவ னெதிரிடை யெரியினி லிடலிவை கூறிய
சொற்றெரி யொருபது மறிபவர் துயரிலர் தூயரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருக்குறுந்தொகை.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.

உள்ளா றுததோர் புண்டரி கத்திரள்
தெள்ளா றுச்சிவச் சோதித் திரளினைக்
கள்ளா றுதபொற் கொன்றை கமழ்சடை
நள்ளா றுவென நம்வினை நாசமே. 1

ஆர ணப்பொரு ளாமரு ளாளனார்
வாரணத்துரி போர்த்த மணாளனார்
நார ணன்னண்ணி யேத்துந ளாறனார்.
கார ணக்கலை ஞானக் கடவுளே. 2

மேகம் பூண்டதோர் மேருவிற் கொண்டெயில்
சோகம் பூண்டழல் சோரத்தொட் டானவன்
பாகம் பூண்டமால் பங்கயத் தானொடு
நாகம் பூண்டுகூத் தாடுந ளாறனே. 3

மலியும் செஞ்சடை வாளர வம்மொடு
பொலியும் பூம்புனல் வைத்த புனிதனார்
நலியுங் கூற்றை நலிந்தந ளாறர்தம்
வலியுங் கண்டிறு மாந்து மகிழ்வனே. 4

உறவ னாய்நிறைந் துள்ளங் குளிர்பவன்
இறைவ னாகினின் றெண்ணிறைந் தானவன்
நறவ நாறும் பொழிற்றிரு நள்ளாறன்
மறவ னாய்ப்பன்றிப் பின்சென்ற பாயமே. 5

செக்க ரங்கழி செஞ்சுடர்ச் சோதியர்
நக்கரங்கர வார்த்தந ளாறனார்
வக்க ரன்னுயிர் வவ்விய மாயற்குச்
சக்க ரம்மருள் செய்த சதுரரே. 6

வஞ்சநஞ் சிற்பொலி கின்ற கண்டத்தர்
விஞ்சையிற் செல்லப் பாவைக்கு வேந்தனார்
வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடார்
நஞ்ச நெஞ்சர்க் கருளுந ளாறரே. 7

100175
MADRAS

அல்ல னென்று மலர்க்கரு ளாயின
சொல்ல னென்றுசொல் லாமறைச் சோதியன்
வல்ல னென்றுவல் லார்வள மிக்கவர்
நல்ல னென்றுநல் லார்க்குநள் ளாரனே. 8

பாம்ப ணைப்பள்ளி கொண்ட பரமனும்
பூம்ப ணைப்பொலி கின்ற புராணனும்
தாம்ப ணிந்தளப் பொண்ணுத் தனித்தழல்
நாம்பணிந்தடி போற்றுநள் ளாறனே. 9

இலங்கை மன்ன னிருபது தோளிற
மலங்க மால்வரை மேல்விரல் வைத்தவர்
நலங்கொ ணீற்றர்நள் ளாறனை நாடொறும்
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே.

திருச்சிற்றம்பலம்.

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதிக்க ணான்முகத்தி லொன்று சென்று
வல்லாத சொல்லுரைக்கத் தன்கைவாளால்
சேதித்த திருவடியைச் செல்ல நல்ல
சிவலோக நெறிவகுத்துக் காட்டு வானை
மாதிமைய மாதொருகூ றாயி னானை
மாமலர்மே லயனோடு மாலுங் காணா
நாதியை நம்பியை நள்ளாற் றானை
நானடியே நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 1

படையானைப் பாசுபத வேடத் தானைப்
பண்டனங்கற் பார்த்தானைப் பாவ மெல்லாம்
அடையாமைக் காப்பானை அடியார் தங்க
ளருமருந்தை யாவாவென் றருள்செய் வானைச்
சடையானைச் சந்திரனைத் தரித்தான் றன்னைச்
சங்கத்த முத்தனைய வெள்ளை யேற்றின்
நடையானை நம்பியை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்தவாறே. 2

படவரவ மொன்றுகொண்டு டரையி லார்த்த
பராபரனைப் பைஞ்ஞீலி மேவி னானை
அடலவரம் பற்றிக் கடைந்த நஞ்சை
யமுதாக வுண்டானை யாதி யானை
மடலரவ மன்னுபூங் கொன்றை யானை
மாமணியை மாணிக்காய்க் காலன் றன்னை
நடலரவஞ் செய்தானை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 3

கட்டங்க மொன்றுதங் கையி லேந்திக்
கங்கணமுங் காதில்விடு தோடு மிட்டுச்
சுட்டங்கங் கொண்டு துதைப் பூசிச்
சுந்தரனுஞ் சூலங்கை யேந்தி னானைப்
பட்டங்க மாலை நிறையச் சூடிப்
பல்கணமுந் தாமும் பரந்த காட்டில்
நட்டங்க மாடியை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 4

உலந்தார்தம் மங்கங்கொண் டுலக மெல்லா
மொருகொடியி னுழல்வானை யுலப்பில் செல்வம்
சிலந்தி தனக் கருள்செய்த தேவதேவைத்
திருச்சிராப் பள்ளியெஞ் சிவலோ கனைக்
கலந்தார்தம் மனத்தென்றுங் காத லானைக்
கச்சியே கம்பனைக் கமழ்பூங் கொன்றை
நலந்தாங்கு நம்பியை நல்லாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 5

குலங்கெடுத்தக் கோணீக்க வல்லான் றன்னைக்
குலவரையின் மடப்பாவை யிடப்பாலானை
மலங்கெடுத்து மாதீர்த்த மாட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ் செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்து தயாமூல தன்ம மென்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லா
நலங்கொடுக்கு நம்பியை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 6

பூவிரியு மலர்க்கொன்றைச் சடையி னானைப்
புறம்பயத்தெம் பெருமானைப் புகலூ ரானை
மாவிரியக் களிறுரித்த மைந்தன் றன்னை
மறைக்காடும் வலிவலமு மன்னி னானைத்
தேவிரியத் திகழ்தக்கன் வேள்வி யெல்லாஞ்
சிதைத்தானை யுதைத்தவன்றன் சிரங்கொண் டானை
நாவிரிய மறைநவின்ற நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 7

சொல்லானைச் சுடர்ப்பவளச் சோதி யானைத்
 தொல்லவுணர் புரமூன்று மெரியச் செற்ற
வில்லானை யெல்லார்க்கு மேலா னானை
 மெல்லியலாள் பாகனை வேத நான்கும்
கல்லாலி னீழற்கீ ழறங்கண் டானைக்
 காளத்தி யானைக் கயிலை மேய
நல்லானை நம்பியை நள்ளாற் றானை
 நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 8

குன்றாத மாமுனிவன் சாபம் நீங்கக்
 குரைகழலாற் கூற்றுவனைக் குமைத்த கோனை
அன்றாக வவுணர்புர மூன்றும் வேவ
 வாரழல்வா யோட்டி யடர்வித்தானைச்
சென்றாது வேண்டிற்றொன் றீவான் றன்னைச்
 சிவனையெம் பெருமானை யென் றிருப்பார்க் கென்றும்
நன்றாகு நம்பியை நள்ளாற் றானை
 நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 9

இறவாமே வரம்பெற்றே னென்று மிக்க
 விராவணனை யிருபதுதோ ளெரிய வூன்றி
உறவாகி யின்னிசைகேட் டிரங்கி மீண்டே
 யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் றன்னை
மறவாதார் மனத்தென்று மன்னி னானை
 மாமதிய மலர்க்கொன்றை வன்னி மத்தம்
நறவார்செஞ் சடையானை நள்ளாற் றானை
 நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 10

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

### பண் — தக்கேசி

திருச்சிற்றம்பலம்.

செம்பொன் மேனிவெண் ணீறணி வானைக்
கரிய கண்டனை மாலயன் காணாச்
சம்பு வைத்தழ லங்கையி னானைச்
சாமவேதனைத் தன்னொப்பி லானைக்
கும்ப மாகரி யின்னுரி யானைக்
கோவின் மேல்வருந் தேவனை யெங்கள்
நம்ப னைநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 1

விரைசெய் மாமலர்க் கொன்றையி னானை
வேத கீதனை மிகச்சிறந் துருகிப்
பரசு வார்வினைப் பற்றறுப் பானை
பாடலோ டானஞ்சு மாடவல் லானைக்
குரைக டல்வரை யேழுல குடைய
கோனைக் ஞானக் கொழுந்தினைக் கொல்லை
நரைவிடை யுடைநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 2

பூவில் வாசத்தைப் பொன்னினை மணியைப்
புவியைக் காற்றினைப் புனலனல் வெளியைச்
சேவின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத்
தேவ தேவனைத் தித்திக்குந் தேனைக்
காவியங் கண்ணி பங்கனைக் கங்கைச்
சடைய னைக்கா மரத்திசை பாட
நாவி லூறுநள் ளாறனை யமுதை
நாயினேன்மறந் தென்னினைக் கேனே. 3

தஞ்ச மென்றுதன் ருளது வடைந்த
பாலன் மேல் வந்த காலனை யிருள
நெஞ்சி லோருதை கொண்டபி ரானை
நினைப்ப வர்மன நீங்ககில் லானை
விஞ்சை வானவர் தானவர் கூடிக்
கடைந்த வேலையுண் மிக்கெழுந் தெரியும்
நஞ்சமுண் டநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 4

மங்கை பங்கனை மாசிலா மணியை
வான நாடனை யேனமோ டன்னம்
எங்கு நாடியுங் காண்பரி யானை
யேழை யேற்கெளி வந்தபி ரானை
அங்க நான்மறை யாணிறை கின்ற
வந்த ணாள ரடியது போற்றும்
நங்கள் கோனைநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னைக் கேனே. 5

கற்பக த்தினைக் கனகமால் வரையைக்
காம கோபனைக் கண்ணுத லானைச்
சொற்ப தப்பொரு ளிருளறுத் தருளுந்
தூய சோதியை வெண்ணெய்நல் லூரில்
அற்பு தப்பழ வாவணங் காட்டி
யடியனு வென்னை யாளது கொண்ட
நற்ப தத்தைநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 6

மறவ னையன்று பன்றிப்பின் சென்ற
 மாயனை நால்வர்க் காலின்கீ ழுரைத்த
அறவ னையம ரர்க்கரி யானை
 யமரர் சேனைக்கு நாயக னான
குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற
 கோனை நான்செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறை விரியுநள் ளாறனைப் பழுதை
 நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 7

மாதி னுக்குடம் பிடங்கொடுத் தானை
 மணியினைப்பணி வார்வினை கெடுக்கும்
வேதனை வேத வேள்வியர் வணங்கும்
 விமல னையடி யேற்கெளி வந்த
தூதனைத் தன்னைத் தோழமை யருளித்
 தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்
நாத னைநள் ளாறனை யமுதை
 நாயினேன்மறந் தென்னினைக் கேனே. 8

இலங்கை வேந்த னெழிறிகழ் கயிலை
 யெடுப்ப வாங்கிம வான்மக ளஞ்சத்
துலங்கு நீள்முடி யொருபதந் தோள்க
 ளிருப துங்நெரித் தின்னிசை கேட்டு
வளங்கை வாளொடு நாமமுங் கொடுத்த
 வள்ளலைப் பிள்ளை மாமதிச் சடைமேல்
நலங்கொள் சோதிநள் ளாறனை யமுதை
 நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 9

செறிந்த சோலைகள் சூழ்ந்த நள்ளாற்றஞ்
சிவனை நாவலூர் சிங்கடி தந்தை
மறந்து நான்மற்று நினைப்பதே தென்று
வனப்பகையைப்ப னாரவன் றொண்டன்
சிறந்த மாலைக ளஞ்சினோ டஞ்சுஞ்
சிந்தையுள் ளுருகிச் செப்ப வல்லார்க்
கிறந்து போக்கில்லை வரவில்லை யாகி
யின்ப வெள்ளத்து ளிருப்பர்க ளினிதே. 10

திருச்சிற்றப்பலம்.

உ

## திருத்தொண்டர் புராணம்

### திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்தருளியது.

திருச்சிற்றம்பலம்.

சீர்தரு செங்காட்டங்குடி நீடுந் திருநள்ளா
றூர்தரு சோலை சூழ்தரு சாந்தை அயவந்தி
வார்திகழ் மென்முலை யாளொரு பாகன் திருமருகல்
ஏர்தரு மன்பால் சென்று வணங்கி வின்புற்றார். 1

### சுந்திரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளியது.

திருச்சிற்றம்பலம்.

பரிசனமு முடன்போதப் பாங்கமைந்த பதிதொறும்
கரியுரிவை புனைந்தார்தங் கழல்தொழுது மகிழ்ந்தேத்தித்
அரிசறு பெருந்தொண்டர் நள்ளாறு தொழுவதற்குப்
புரிவுறுமெய்த் திருத்தொண்ட ரெதிர்கொள்ளப் புக்கணைந்
[தார் 2

விண் தடவு கோபுரத்தைப் பணிந்தகர மேற்குவித்துக்
கொண்டுபுகுந் தண்ணலார் கோயிலினை வலஞ்செய்து
மண்டியபே ரன்பினொடு மன்னிதிரு நள்ளாறர்
புண்டரிகச் சேவடிகீழ்ப் பொருந்தநில மிசைப்பணிந்தார். 3

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளியது

திருச்சிற்றம்பலம்.

பங்கையப்பா சடைத்தடஞ்சூழ் பழனநாட்
டகன்பதிகள் பலவும் நண்ணி
மங்கையொரு பாகத்தார் மகிழ்கோயில்
எனைபலவும் வணங்கிப்போற்றித்
தங்கிசையாழ்ப் பெரும்பாண ருடன்மறையோர்
தலைவனார் சென்று சார்ந்தார்
செங்கைமான் மழுவேந்தும் சினவிடையார்
அமர்ந்தருளுந் திருநள் ளாறு. 4

நள்ளாற்றி லெழுந்தருளு நம்பர்திருத்
தொண்டர்குழாம் நயந்து சென்று
கொள்ளாற்றி லெதிர்கொண்டு குலவியுடன்
சூழ்ந்தணையக் குறுகிக் கங்கைத்
தெள்ளாற்று வேணியர்தந் திருவளர்கோ
புரம் இறைஞ்சிச் செல்வக் கோயில்
உள்ளாற்ற வலங்கொண்டு திருமுன்பு
தாழ்ந்தெழுந்தார் உணர்வின் மிக்கார். 5

உருகியவன் புறகாத வுள்ளுருகி
நனையீரம் பெற்றுற் போல
மருவுதிரு மேனியெல்லாம் முகிழ்த்தெழுந்த
மயிர்ப்புளகம் வளர்க்குநீராய்
அருவிசொரி திருநயனத் தானந்த
வெள்ளமிழிந் தலைய நின்று
பொருவில்பதி கம்போக மார்த்தபூண்
முலையா ளென்றெடுத்துப் போற்றி. 6

யாழ்நரம்பி லாரவியல் விசைகூடப்
பாடியே எண்ணில் கற்பச்
சேணளவு படவோங்குந் திருக்கடைக்காப்
புச்சாதிச் செங்கண் நாகப்
பூண்கலத் தவர்பாதம் போற்றிசைத்துப்
புறத்தணைந்து புவன மேத்தும்
பாணனார் யாழிலிடப் பாலறு
வாயருள் பணித்த போது. 7

பிள்ளையார் திருத்தாளங் கொடுபாடப்
பின்புபெரும் பாண னார்தாம்
தெள்ளமுத வின்னிசையின் தேமபொழிதந்
திரியாழைச் சிறக்க வீக்கிக்
கொள்ளவிடும் பொழுதின்கட் குலவயத்தோர்
களிகூரக் குலவு சண்பை
வள்ளலார் திருவுள்ளம் மகிழ்ந்துதிருத்
தொண்டருடன் மருவுங் காலை. 8

மன்னுதிரு நள்ளாற்று மருந்தைவணங்
கிப்போந்து வாச நன்னீர்ப்

பொன்னிவளந் தருநாட்டுப் புறப்பணைசூழ்
திருப்பதிகள் பலவும் போற்றிச்

செந்நெல்வயற் செங்கமல முகமலருந்
திருச்சாத்த மங்கை மூதூர்

தன்னிலெழுந் தருளினர் சைவசிகா
மணியார்மெய்த் தவத்தோர் சூழ. 9

திருச்சிற்றம்பலம்.

## தலபுராணம்

### சனீசுவரர் துதி.

பெருவாச நளனொடும்வந் தவன்தீர்த்த மாடுதலாற்
பெற்ற பேற்று

லொருவாவந் தெம்பெருமா னருள்பெற்று மிகவுமன
முவகை பூப்பக்

கருவாசற் புக்காற்போற் புகுந்தொளிரு நள்ளாற்றுக்
கனக வச்ரத்

திருவாச லிடனின்ற மந்தனிரு செந்தளிர்த்தாள்
சிந்தை செய்வோம்.

## திருப்புகழ்.

பச்சையொண்கிரி போலிருமாதனை
முற்றி தம்பொறி சேர்குழல்வாளயில்
பற்றுபுண்டரி காமென எய்கயல் விழிஞான

பத்திவெண்டர ளாமெனும் வாணகை
வித்ருமஞ்சிலை போல்நுதலாரிதழ்
பத்மசெண்பக மாமணுபூதியி னழகாளென்

றிச்சையக்தரி பார்வதிமோகினி
    தத்தைபொன்கவி ஞலிலைபோல்வயி
    றிற்பசுங்கிளி யானமினாவிடை யபிராமி

எக்குலக்குடி லொடுலகியாவையு
    மிற்பதிந்திரு நாழிகெலாலற
    மெப்பொதும்பகிர் வாள்குமராஎன வுருகேனே

கச்சையுந்திரு வாளுமீராறுடை
    பொற்புயங்களும் வேலுமீராறுள
    கட்சிவங்கம லமுகமாறுள முருகோனே

கற்பகந்திரு நாடுயர்வாழ்வுற
    சித்தர்விஞ்சையர் மாகர்சபாசென
    கட்டவெங்கொடு சூர்கிளைவேரற விடும்வேலா

நச்சுவெண்பட மீதணைவார்முகில்
    பச்சைவண்புய ஞர்கருடாசனர்
    நற்கரத்தனு கோல்வளைநேமியர் மருகோனே

நற்புனந்தனில் வாழ்வளிநாயகி
    யிச்சைகொண்டரு வாரணமதொடு
    நத்திவந்தக ளாறுறைதேவர்கள் பெருமாளே

காழியர் தலைவன் கைதவன் காணக் கனலிடைப்
பெய்துமே சிதைவுறு திலகி
யூழிகள் பலவு முதவுமெய்ப் போக மார்த்தபூண்
முலையினு ளுடனுறை பரமன்
ஆழிசூ ழுலகில் களன்முத லனேகருக் கருளுநகள்
ளாறதன் மான்மிய மடியேன்
வாழிமெய் கண்டான் வழிவரு தருமை சண்முக
குரவ ரருடர வணங்கேதன்.

திருச்சிற்றம்பலம்.

TAMIL NADU ... LIBRARY
MADRAS
100175